சம்பவத்தின்போது, லாபியிலிருந்து அப்புறப்படுத்தச் சொல்லியிருக்கிறேன். பேரவைக்குள் பெயர் குறிப்பிட்டு வெளியேற்றவில்லை. எனவே, அது பேரவை விதி 120-ன் கீழ் வராது. எனவே, நான் எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதற்கும் அவர் வரக்கூடாது என்று உத்திரவிட்டிருப்பது திரும்பப் பெறப்படுகிறது. அதே போல மற்ற உறுப்பினர்களும் அன்றைக்கு ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டதிலேதான் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் காவலர்களைத் தாக்கிய நிகழ்ச்சி. அந்தத் தாக்கியதிலிருந்து காவலர்களை காப்பாற்றுவதற்காக அங்கிருந்து அவர்களை அப்புறப்படுத்தச் செய்திருந்தேன். எனவே, அது பேரவை நடவடிக்கையின் கீழ் நடவடிக்கை எடுத்ததாக வராது. எனவே, இன்று முழுவதும் அவர்கள் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் மின் தடங்கல் அடிக்கடி ஏற்படுவது குறித்து பேரவையில் எழுப்ப வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார். அதற்குப் பின்னர், பல நாட்கள் அவர் அவைக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலையில் இருந்தார். அப்படி வந்திருந்தால், இடையிலே எடுத்திருப்பேன். அந்தப் பிரச்சினையையும் எடுக்க வேண்டும், இன்னொரு பிரச்சினை என்று இப்போது அவர் தெரிவித்திருக்கிற காரணத்தினால், அந்த பிரச்சினையை பேரவையின் கவனத்திற்கு எழுப்ப அனுமதிக்கிறேன்.

முற்பகல் 11-50

4. சிறப்புக் கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(ஆ) மின் தடங்கல் அடிக்கடி ஏற்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களாக சென்னையிலும் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மின்வெட்டு 'ஏற்பட்டிருக்கிறது. அப்படி அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதனால்; படிக்கின்ற மாணவ சமுதாயமும், அதே போல மின்சாரத்தை பயன்படுத்துகின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, இது சம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டேன். தாங்கள் என்னை அழைக்கின்ற நேரத்திலே, சில நாட்களுக்கு முன்பு அவர் கூறியிருந்தார், நான் அவைக்கு வரமுடியாத சூழ்நிலையிலிருந்த காரணத்தினால் இதை

1995 ஏப்ரல் 28] [திரு. இளம்வழுதி]

எடுக்காமல், இப்போது எடுத்துக் கொள்கிறேன் என்று அனுமதித்தீர்கள். அனுமதிக்கு நன்றி. ஆனால் இதை ஏற்கனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து அவர் பதில் சொல்லியிருக்கிறார். அந்த பதிலில் அவர் என்ன சொன்னார் என்றால், இப்படி அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதற்குக் காரணம் ஆந்திர மாநிலத்திலே இருப்பவர்கள் தங்களுக்குரிய பங்கீட்டைவிட அதிகமாக இழுத்துக்கொள்கிற காரணத்தினால் இப்படி அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முடிவான தீர்வு என்ன, என்ன செய்யப்போகிறீர்கள் என்று நான் கேள்வி கேட்ட நேரத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 4 மாநிலங்களைச் சேர்ந்த மின்சார வாரியத் தலைவர்களை எல்லாம் டெல்லியிலே அழைத்து பேச இருக்கிறார்கள், பேசி அதன் பிறகு ஒரு முடிவு தெரிவிக்கப்படும் என்று ஏறத்தாழ 20 நாட்களுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தெரிவித்ததற்குப் பிறகு அண்மையிலே 2, 3 நாட்களாக தொடர்ந்து இப்படி மின்சார வெட்டு ஏற்படுகிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் 4 மாநில மின்சார வாரியத் தலைவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளில் எடுத்த நடவடிக்கை என்ன, எடுத்த தீர்வு என்ன என்று கேட்டுக்கொள்வதோடு இப்படி அடிக்கடி ஆந்திர மாநிலம் தங்களுக்குரிய பங்கீட்டை விட அதிகமான பங்கீட்டை, தமிழ்நாட்டுக்குரிய பங்கீட்டை எடுத்துக்கொள்கின்ற காரணத்தினால் மின்வெட்டு ஏற்படுகிறது என்று பதில் சொல்லப்படுகிறது. எனவே இப்படி அடிக்கடி நமக்குரிய பங்கீட்டை அவர்கள் எடுத்துக்கொள்கின்ற காரணத்தினால் அந்த ஆந்திர அரசாங்கத்தை கண்டித்து இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் ஏற்கெனவே இது சம்பந்தமான பிரச்சினையை இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக தெளிவான விளக்கத்தை நான் ஏற்கெனவே தந்திருக்கிறேன். பொதுவாக இந்த கோடைக்காலத்திலே ஏற்படுகின்ற பிரச்சினையைப் பற்றி நாம் முதலிலே மனதிலே கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் பொதுவாக கோடைக்காலங்களிலே நம்முடைய புனல் மின்சார உற்பத்தி குறைந்து விடுகிறது. எல்லா மாநிலங்களிலும், பொதுவாக இன்றைக்கு

TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். கண்ணப்பன்] [*1995 ஏப்ரல் 28*

ஆந்திராவிலே மிக கடுமையான மின் பற்றாக்குறை இருப்பது ஒரு காரணம். இரண்டாவதாக ராமகுண்டம் பகுதியிலே இன்றைக்கு மின் உற்பத்தி குறைந்து இருக்கிறது. சிங்கரேணி நிலக்கரி கொண்டு வருவதிலே அங்கே ஸ்டிரைக் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே 2,000 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டிய அந்த மின் நிலையத்தில் இப்போது 1,200 மெகாவாட் அளவுக்குத்தான் உற்பத்தி செய்கிறார்கள். அங்கிருந்து தான் நமக்கு பங்கு வருகிறது. பொதுவாக இன்றைக்கு ஆந்திராவினுடைய நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஆகவேதான் இந்த தென்மண்டல கட்டமைப்பைப் பொறுத்தமட்டில் அவர்கள் அதிகமாக ஓவர்டிராயல் செய்கின்றபோது பிரச்சினை ஏற்படுகிறது. நாம் பல முறை எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். நேற்றைக்கு முன்தினம் கூட டெல்லியிலே இருக்கின்ற ஸ்பெஷல் செக்ரட்டரி ஆப்ரஹாம் அவர்களிடத்திலே நான் 15 நிமிடம் இது சம்பந்தமாக கடுமையாக விவாதித்தேன். நீங்கள் செய்கின்ற பிரச்சினைகள் காரணமாக, நீங்கள் சரியான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்றபோது தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது, இந்த பிரிகுவன்சி 48.5க்கு கீழே குறைந்த உடனேயே நம்முடைய மின் நிலையங்கள் செயல் இழந்து விடுகிறது, கல்பாக்கம், நெய்வேலி அதேபோல எண்ணூர் போன்றவைகள் எல்லாம் செயல் இழந்துவிடுகின்றபோது நமக்கு ஒட்டுமொத்தமான பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது, ஆகவே ஆந்திராவிலே இருக்கின்ற சூழ்நிலை காரணமாக எங்களுக்கு இதுபோன்ற இடர்பாடு ஏற்படுகிறது, ஆகவே நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்றேன். அந்த அதிகாரம் சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அத்தாரிட்டி ஆஃப் இண்டியா என்று சொல்லப்படுகின்ற மைய அரசினுடைய நிறுவனத்திற்கு இருக்கிறது. நாம் அதை தனிமைப்படுத்த முடியாது. சதர்ன் கிரிட் என்று வருகிறபோது, 4 மாநிலங்களுடைய கட்டமைப்பு என்று வருகின்ற போது அதை கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அத்தாரிட்டி ஆஃப் இண்டியா அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதை கட்டுப்படுத்த வேண்டும். இது சம்பந்தமாக 10.4.95லே ஹைதராபாத்திலே கூட மின்வாரிய சேர்மன்களை எல்லாம் கூட்டி ஒரு மீட்டிங் நடத்தப்பட்டது. கடுமையான நம்முடைய அப்ஜக்ஷனை அங்கே தெரிவித்தோம். தெரிவித்ததற்குப் பின்னாலே அவர்கள் சரியாக நடந்துக் கொண்டார்கள் கொஞ்ச காலம். இப்போது அவர்களுக்கு தேவை அதிகமாக இருக்கின்ற போது திடீரென்று இவ்வளவு ஓவர்டிராயல் வந்திருக்கிறது. ஆகவே நமக்கு, ஏறத்தாழ 22 இலட்சம் யூனிட்டை அவர்கள்

எடுத்துக்கொள்கின்ற சூழ்நிலை வருகின்றபோது, *300* மெகாவாட் அளவிற்கு உற்பத்தி பாதிப்பு ஏற்படுகிறது. நம்முடைய மின் நிலையங்களும் செயல் இழந்து விடுகிறது. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை. நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே இதிலே நாம் தெளிவாக இருக்கிறோம். நம்முடைய உற்பத்தியை நாம் தெளிவாக இன்றைக்கு நிறைவு செய்து வைத்திருக்கிறோம். வட சென்னை அனல் மின் நிலையங்களில் கூட நிலக்கரிக்கு பதிலாக ஆயில் மூலம் இன்றைக்கு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். நிலக்கரி வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆனாலும், அதிலே பிரச்சினைகள் இருந்தாலும் கூட இன்றைக்கு ஆயில் மூலம் செய்கிறோம். அதற்குரிய கொஞ்சம் பூர்வாங்க வேலைகள் இரண்டாவது யூனிட்டில் நடைபெறாவிட்டாலும், ஆயில் மூலமாக இன்றைக்கு *100* மெகாவாட்டுக்கு மேலே கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய மின் நிலையங்களைப் பொறுத்தமட்டிலே தெளிவான நிலையில் இன்றைக்கு சரியான உற்பத்தியைச் செய்துகொண்டிருக்கின்றன. மேட்டூராக இருந்தாலும் சரி, அல்லது எண்ணூராக இருந்தாலும் சரி, அல்லது தூத்துக்குடியாக இருந்தாலும் சரி, அல்லது நம்முடைய வட சென்னை அனல் மின் நிலையமாக இருந்தாலும் சரி, நம்மிடத்திலே தண்ணீர் இருக்கின்ற இடங்களிலே புனல் நிலையங்களும் சரியாக வேலை செய்கின்றன. இந்தப் பிரச்சினை தீர்வதற்கு மத்திய அரசுதான் இதிலே கடுமையான முடிவு எடுக்க வேண்டும். நேற்றைக்குகூட நான் சால்வே அவர்களுக்கு ஒரு கடுமையான கடிதம் எழுதியிருக்கிறேன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில், நம்முடைய எதிர்ப்புகளை எல்லாம் தெரிவித்து, இதுபோன்ற நிலை நீடித்தால் சரியாக வராது, இதுதான் எங்களுடைய கடைசி எச்சரிக்கையாக இருக்கும், இதுபோன்ற சூழ்நிலைகள் வருகின்றபோது எங்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது என்று கடுமையான எச்சரிக்கைக் கடிதம்கூட நாங்கள் எழுதியிருக்கிறோம். ஆகவே இதுதான் சூழ்நிலை. தமிழ்நாடு அரசு இதிலே தனிப்பட செயல்படுவதற்கு ஐலேண்டு செய்வதற்கு நம்மிடத்திலே இருக்கின்ற மின் நிலையங்களை நாம் ஐலேண்டு செய்து வைத்திருக்கிறோம். ஆனால் ஒட்டுமொத்தமாக சதர்ன் கிரிட்டை நாம் ஐலேண்டு செய்யக் கூடிய அதிகாரம் நம்மிடத்திலே கிடையாது.

முற்பகல் 11–55

இது ஏற்கெனவே காலம் காலமாக இருக்கின்ற பிரச்சினை. இந்த அரசு ஏற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. தொடர்ந்து

இருக்கின்ற பிரச்சினை. ஆக மத்திய அரசு தான் இதிலே தெளிவான முடிவை எடுக்கவேண்டும். ஆந்திர அரசை எதிர்த்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவது என்பது சரியாக இருக்காது. இந்தியா என்பது ஒரு கூட்டமைப்பு கொண்ட ஒரு நாடு. அதிலே ஒரு கண்டனத் தீர்மானம் என்பதை அரசின் சார்பில் போடுவது என்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஆகவே அவர்களுக்கு நாங்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியதன் பலமுறை நாங்கள் தொடர்பு கொண்டு அறிவுறுத்தியிருக்கிறோம். இதிலே மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் அவர்களே இதை முடிவு செய்ய முடியும். மத்திய அரசை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். தொலைபேசியிலே பேசியிருக்கிறோம். கடிதங்கள் எழுதியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இது சம்பந்தமாக தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது போன்ற சூழ்நிலைகள் இனிமேல் வராது என்று தெரிவித்திருக்கிறேன். எனவே, இனிமேல் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படக்கூடாது என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆகவே இனிமேல் இந்த மாதிரி சூழ்நிலைகள் வராமல் பார்த்துக்கொள்வோம். அப்படி வருகின்றபோது மேல் நடவடிக்கை என்ன எடுக்கலாம் என்பதை இந்த அரசு அடுத்து பரிசீலிக்கும். தற்போது நிலைமை சீரடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதற்கு மேல் ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே திரும்ப விளக்கம் இல்லை. (குறுக்கீடு) இதிலே விளக்கம் எப்போதும் அனுமதிப்பது இல்லை. இப்போது அனுமதித்தால், அன்றைக்கு அனுமதித்தீர்களே என்று திரும்பக் கேட்பீர்கள். (குறுக்கீடு) எப்போதும் அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அமைச்சர் விளக்கம் கொடுத்துவிட்டால் அதன் மேல் விளக்கம் கேட்க முடியாது. (குறுக்கீடு) இது முன் உதாரணம் ஆகிவிடும். உட்காருங்கள்.

5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஆ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழக ஆட்சி மன்றப் பேரவைகளுக்கு (செனட்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன.